# புரிக் (Purik)



**வசிப்பிடம்:** சிறிய எண்ணிக்கையிலான புரிக் மக்கள் திபெத்திய-இந்திய எல்லையிலுள்ள கார் மாவட்டத்தில் வசிக்கின்றனர். அதிக எண்ணிக்கையிலான புரிக் மக்கள் ஜம்மு காஷ்மீர் மாநிலத்தில் கார்கில் மாவட்டத்தின் சுறு (Suru) பள்ளத்தாக்கில் வாழ்கின்றனர். இப்பகுதி கிழக்கில் லதாக்காலும் வடக்கு மற்றும் வடமேற்கில் பல்திஸ்தானாலும் (Baltistan) சூழப்பட்டுள்ளது. புரிக் மக்களுடைய குடியிருப்பு மிகவும் தொலைதூரத்தில் உள்ளது. இவர்கள் கடல் மட்டத்திலிருந்து 7,088 மீட்டர்கள் (23,250 அடிகள் ) வரை உயரமுள்ள மலைச் சிகரங்களும், 265 மீட்டர்கள் (870 அடிகள்) வரை ஆழமுள்ள பள்ளத்தாக்குகளும் உடைய இமயமலையின் மேற்கு முனையில் வசிக்கின்றனர். ஆறு மாதங்களுக்குக் கார்கில் இந்தியாவின் மற்ற பகுதிகளிலிருந்து துண்டிக்கப்படுகிறது; குளிர்காலப் பனி 12.2 மீட்டர்கள் (40 அடிகள்) உயரம்வரை மூடும். நவம்பர் முதல் பிப்ரவரி மாதம்வரை வெப்பநிலை -45 டிகிரி செல்சியஸ் (-49 டிகிரி F) வரை சரிகிறது. திபெத்தில் உள்ள சில புரிக்கள் புனன் (Bunan) மற்றும் லாஹுளி தினன் (Lahuli Tinan) பகுதியில் வசிக்கின்றனர்.

**அடையாளம்:** சில ஆவணங்கள் சீனாவில் குறைந்த எண்ணிக்கையில் புரிக்கள் இருப்பதாகக் காட்டுகின்றன. இவர்கள் எந்த இனத்தில் இணைக்கப்பட்டுள்ளனர் எனத் தெரியவில்லை. "புரிக்-பா என்ற பெயர் லதாக் மற்றும் பல்திஸ்தான் வாசிகளால் இடப்பட்டது. புரிக்-பா என்பதின் பொருள் 'திபெத்தைப் பிறப்பிடமாகக் கொண்டவர்கள்'. என்பதாகும்"

**மொழி:** புரிக் மொழி புரிக்-ஸ்கத் (Purik-Skad) என அழைக்கப்படுகிறது. இது திபெத்திய மொழி மற்றும் பல்தி (Balti) மொழியின் கலப்பாகும். "இவர்கள் இஸ்லாம் மதத்தைப் பின்பற்றத் தொடங்கியது முதல் இவர்களது மொழியில் பல்தி மொழியின் ஆதிக்கம் ஏற்பட்டது. மதப் பிரசங்கங்கள், பாடல்கள் மற்றும் துயரங்கொண்டாடுதல் இவையனைத்தும் பல்தி அல்லது பெர்சியன் (Perisan) மொழியில் செய்யப்படுகின்றன." இதன் மூல நிலையில், புரிக் லாஹுளி மற்றும் லதாகி மொழிகளோடு ஒத்துப்போகும் மேற்கத்திய திபெத்திய மொழியாகும்.

**வரலாறு:** வட இந்தியாவின் தொன்மையான இனங்களில் புரிக் இனம் ஒன்றாகும். தங்கள் மதத்தைக் கைவிட்டு மற்றொரு மதத்தை ஏற்றுக்கொண்ட திபெத்திய புத்தமதத்தைச் சேர்ந்த மக்களுக்கு ஒரு அரிதான உதாரணம் இவர்கள்.

**பழக்கவழக்கங்கள்:** இஸ்லாம் மதத்திற்கு மாறும்முன் புரிக்கள் திபெத்திய புத்தமதத்தைப் பின்பற்றினர். "பல பதி மணம், மூத்த குமாரனுக்குச் சொத்துரிமை தருதல் மற்றும் ஆண் பெண்களைப் புத்த மடத்திற்கு அனுப்புதல் போன்ற வழக்கங்களைக் கைக்கொண்டு மக்கள்தொகை கட்டுப்பாட்டுக்குள் வைக்கப்பட்டதால் உணவும், தீவனமும் ஏராளமாய் இருந்தன. இஸ்லாம் மதம் அறிமுகமானபின் மக்கள் பலதார மணம், முத்தா (Mut'ah – தற்காலிகமான திருமணம்) மற்றும் சொத்தைப் பிள்ளைகள் யாவருக்கும் பிரித்துக்கொடுப்பது போன்ற வழக்கங்களைக் கைக்கொள்ளத் தொடங்கினர், இதன் விளைவாக மக்கள்தொகை பெருக்கம் அதிகரித்துள்ளது."

**மதம்:** ஆறு கிராமங்களைத் தவிர இந்தியாவிலுள்ள மற்றெல்லா புரிக்கள் ஷியா (Shi'a) இஸ்லாமியர்கள் ஆவார்கள். குறைந்த எண்ணிக்கையிலான திபெத்தில் வசிக்கும் புரிக் மறுபடியும் புத்த மதத்திற்குத் திரும்பி விட்டார்களா அல்லது இஸ்லாமிய மதத்தையே பின்பற்றுகிறார்களா என்பது உறுதிப்படுத்தப்படாத காரியமாகும்.

**கிறிஸ்துவம்:** புரிக் மக்களைச் சந்திக்க எடுக்கப்பட்ட ஒரே முயற்சி கார்கில் பகுதியில் கி.பி.1900 முதல் கி.பி.1956 வரை பணி செய்த சென்ட்ரல் ஏசியன் மிஷன் (Central Asian Mission) மூலம் செய்யப்பட்டது. அனாதை ஆசிரமம் மற்றும் மருத்துவமனை நடத்தியதோடு கூட மிஷனெரி டேனியல் பெர்கர் (Daniel Berger) கி.பி. 1950 ல் புதிய ஏற்பாட்டை புரிக் மொழியில் மொழி பெயர்த்தார். மஷ்ஷோனி (Mazzoni) குடும்பம், நீன்னா ட்ரு (Nina Drew) மற்றும் பெட்டி(Betty) ஆகியவர்கள் இங்குப் பணியாற்றிய மற்ற மிஷனெரிகள் ஆவர். புரிக் இனத்தில் மொத்தம் மூன்று கிறிஸ்தவர்கள் மட்டுமே உண்டு, இவர்கள் கார்கிலிக்கு வெளியே வசிக்கின்றனர். புரிக் திபெத்தியர்கள் மத்தியில் அறியப்பட்ட கிறிஸ்தவர்கள் யாருமில்லை. புரிக்கள் சுவிசேஷத்தை அதிகமாக விரோதிப்பவர்கள் எனக் கருதப்படுகின்றனர்.




**Population in China:**
600 (1997)
650 (2000)
840 (2010)
**Location:** Tibet
**Religion:** Islam
**Christians:** None Known

## மேலோட்டம்:

**மற்ற பெயர்கள்:** Burig, Purigskad, Purik Bhotia, Purig, Purik-pa

**மக்கள்தொகை:** 600 (1997 AMO); 148,000 in India (1977 Voegelin & Voegelin)

**மொழிப்பிரிவு:** சீன-திபெத்திய, திபெத்திய-பர்மிய, போதி, போதிஷ், திபெத்திய, மேற்கு திபெத்திய மொழி

**மொழி வழக்குகள்:** 0

**மதம்:** ஷியா இஸ்லாம் மற்றும் புத்த மதம்

**கிறிஸ்துவம்:** 0%

**வேதாகமம்:** சில பகுதிகள் கி.பி. 1938; புதிய ஏற்பாடு கி.பி. 1950

**இயேசுதிரைப்படம்:**இல்லை

**சுவிசேஷ ஒலிப்பதிவுகள்:** Purig #01432

**கிறிஸ்தவ அலைபரப்புகள்:** இல்லை

ROPAL **குறியீடு :** BXR00

**கிறிஸ்துவத்தின் நிலை**




- சுவிசேஷத்தைக் கேட்டிராதவர்கள்
- சுவிசேஷத்தைக் கேட்டும் இரட்சிக்கப்படாதவர்கள்
- ஏதாவது ஒரு கிறிஸ்துவப் பிரிவைப் பின்பற்றுபவர்கள்